செ.வெ.எண்: 17 நாள்: 09.07.2016

# பத்திரிக்கை செய்தி

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களால் அரசுக்கு ஒப்படைப்பு செய்யப்படும் 50% இடங்களுக்கும் தொழிற்பயிற்சி வகுப்புகளில் சேர்ந்திட, இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தவர்களுக்கு மாவட்ட கலந்தாய்வு மூலம் மாணவர்கள் சேர்க்கைக்கு 11.07.2016 முதல் 15.07.2016 வரை (முற்பகல் மற்றும் பிற்பகல்) அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் புதுக்கோட்டையில் மாவட்ட கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

11.07.2016 அன்று முற்பகல் 10.00மணிக்கு (மாநில விளையாட்டுபோட்டி, மாற்றுத் திறனாளி, ஆதரவற்ற ஏழை மாணவர் முன்னாள் இராணுவத்தினர் வாரிசுதாரர், கணவரை இழந்தோர்), ஆகிய சிறப்பு இட ஒதுக்கீட்டிற்கும், பிற்பகல் 12.30 மணிக்கு பழங்குடியினர் இடஒதுக்கீட்டிற்கும், 8-வது தேர்ச்சி பெற்று விண்ணபித்த அனைத்து இனமகளிருக்கும், 10-வது தேர்ச்சி பெற்ற மகளிருக்கான இட ஒதுக்கீட்டில் 98.5% முதல் 75.5% வரையிலும், 12.07.2016 முற்பகல் 8.00 மணிக்கு 10-வது தேர்ச்சி பெற்ற மகளிருக்கும் 75.5% முதல் 35% வரையிலும், பிற்பகல் 1.00மணிக்கு 8-வது தேர்ச்சி பெற்ற பொதுப்பிரிவினருக்கும் 95%முதல் 56.5%வரை(ரேங்க் எண் 1 முதல் 200 வரை), 13.07.2016 முற்பகல் 8.00 மணிக்கு எட்டாவது பொதுப்பிரிவினருக்கு 56.5% முதல் 21.5% வரை (ரேங்க் எண் 201முதல் 424வரை), 10-வது தேர்ச்சி பெற்ற பொதுப்பிரிவினருக்கு பின்வருமாறும் கலந்தாய்வு நடைபெறவுள்ளது.

13.07.2016 பிற்பகல்1.00மணி98.5%முதல் 76.5%வரையிலும்,(ரேங்க் எண் 1முதல் 300வரை)

14.07.2016முற்பகல் 8.00மணி76%முதல் 68%வரையிலும் ( ரேங்க் எண் 301 முதல் 600வரை)

14.07.2016பிற்பகல் 1.00மணி68%முதல் 62%வரையிலும் ( ரேங்க் எண் 601முதல் 900வரை)

15.07.2016முற்பகல் 8.00மணி62%முதல் 54.5%வரையிலும் (ரேங்க் எண் 901முதல் 1300வரை)

15.07.2016பிற்பகல் 1.00மணி54.5.%முதல் 35%வரையிலும் (ரேங்க் எண் 1301முதல் 1733வரை)

ஏற்கெனவே விண்ணப்பித்த www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரரின் ரேங்க் எண், கலந்தாய்வுநாள், நேரம் தெரிந்து கொள்ளலாம்.

மாவட்ட கலந்தாய்விற்கு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் அனைவரும் கலந்தாய்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், விபரங்களுக்கு புதுக்கோட்டை, அரசினர் தொழிற் பயிற்சி நிலைய முதல்வர் அவர்களை நேரிலோ அல்லது தொலைபேசி மூலமாகவோ தொடர்புகொள்ளலாம். தொலைபேசிஎண். 04322-221584.

**மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.**

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**